ISBN : 978-81-685205-4-7

செந்தமிழறிஞர்கள்:108



ச வே சுப்பிரமணியன்

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/128.%20%E0%AE%9A.%E0%AE%B5%E0%AF%87.%E0%AE%9A%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%A9%E0%AF%8D_1929

செந்தமிழ்சிற்பிகள்

ச. வே. சுப்பிரமணியன் (1929 - 2017)



அறிமுகம்

ச. வே. சுப்பிரமணியன் (S. V. Subramanian, திசம்பர் 31, 1929 - சனவரி 12, 2017), தமிழக எழுத்தாளரும் தமிழறிஞரும் ஆவார். திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், துறைத்தலைவராகவும் பணியாற்றியுள்ளார். சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். இவர் எழுதிய தமிழ் நிகண்டுகள் எனும் நூல் தமிழ் வளர்ச்சித் துறையின் 2008 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் அகராதி, கலைக்களஞ்சியம், கலைச் சொல்லாக்கம், ஆட்சித் தமிழ் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

இளமைப் பருவம்

இவர் திருநெல்வேலி மாவட்டம் வீரகேரளம்புதூரில் சு. சண்முகவேலாயுதம், இராமலக்குமி ஆகியோருக்குப் பிறந்தவர். விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள புனித இருதய மேல்நிலைத் தொடக்கப் பள்ளியிலும், அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி

பயின்றார். இடைநிலைக் கல்வியை ம.தி.தா. இந்துக் கல்லூரியில் பயின்று, 1950-53 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று இளங்கலை (சிறப்பு) பட்டம் பெற்றார். முனைவர் பட்டத்தைக் கேரளப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து பெற்றார்.

பணி

1953-56 காலப்பகுதியில் தூத்துக்குடி வ.உ.சி.கல்லூரியில் 1953-56 தமிழ் பயிற்றுநராகப் பணியைத் தொடங்கி, பின்னர் பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியிலும், திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கல்லூரியிலும் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர் கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத்தலைவராகப் பணியாற்றினார்.

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகப் பணிபுரிந்து அரிய ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் இதுவரை தமிழில் 54, ஆங்கிலத்தில் 5, மலையாளத்தில் ஒன்று என 60 நூல்களை எழுதியுள்ளார். பல கருத்தரங்குகளிலும் உரையாற்றியுள்ளார். உலக நாடுகள் பலவற்றிற்கும் சென்று ஆய்வுகள் மேற்கொண்டார்.

நெல்லை மாவட்டம், பாபநாசத்தில் 1969 இல் திருவள்ளுவர் கல்லூரியை உருவாக்கினார்.

விருதுகள்

இராசா சர் முத்தையா செட்டியார் நினைவுப் பரிசில் உள்ளிட்ட பல பரிசில்களைப் பெற்றுள்ளார். தொல்காப்பியச் செம்மல், கம்பன் விருது, கி. ஆ. பெ. விசுவநாதம் விருது உள்ளிட்ட விருதுகளும் பெற்றுள்ளார். இவரது வாழ்க்கை வரலாறு "தமிழ் ஞாயிறு" என்னும் பெயரிலும், "சாதனைச்செம்மல்.ச.வே.சு" என்னும் பெயரிலும் நூலாக வெளிவந்துள்ளது.

நூல்கள்

இலக்கிய நினைவுகள் 1964
சிலம்பின் சில பரல்கள் 1972
இலக்கியக் கனவுகள் 1972
மாந்தர் சிறப்பு 1974
ஒன்று நன்று 1976
அடியார்க்கு நல்லார் உரைத்திறன் 1976
இலக்கிய உணர்வுகள் 1978
கம்பன் கற்பனை 1978
காப்பியப் புனைதிறன் 1979
கம்பனும் உலகியல் அறிவும் 1981

கம்பன் இலக்கிய உத்திகள் 1982
கம்பன் கவித்திறன் 2004
இளங்கோவின் இலக்கிய உத்திகள் 1984
இலக்கிய வகையும் வடிவும் 1984
தமிழ் இலக்கிய வரலாறு 1999
சிலப்பதிகாரம் மூலம் 2001
சிலப்பதிகாரம் இசைப்பாடல்கள் 2001
சிலம்பும் சிந்தாமணியும் 1977
திராவிட மொழி இலக்கியங்கள் 1984
இளங்கோவும் கம்பனும் 1986
தொல்காப்பியம் திருக்குறள் சிலப்பதிகாரம் 1998
தமிழில் விடுகதைகள் 1975
தமிழில் விடுகதைக் களஞ்சியம் 2003
காந்தி கண்ட மனிதன் 1969
பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள் 1982
நல்வாழ்க்கை 1992
மனிதம் 1995
மனமும் உயிரும் 1996
உடல் உள்ளம் உயிர் 2004
தமிழர் வாழ்வில் தாவரம் 1993
கூவநூல் 1980
சிலப்பதிகாரம் தெளிவுரை 1998
சிலப்பதிகாரம் மங்கலவாழ்த்துப் பாடல் 1993
தொல்காப்பியம் தெளிவுரை 1998
சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை 2001
திருக்குறள் நயவுரை 2001
திருமுருகாற்றுப்படை தெளிவுரை 2002
சிலப்பதிகாரம் குன்றக்குரவை உரை 2002
கானல்வரி உரை 2002
பத்துப்பாட்டு உரை 2002
இலக்கணத்தொகை எழுத்து 1967
இலக்கணத்தொகை சொல் 1970
இலக்கணத்தொகை யாப்பு,பாட்டியல் 1978
வீரசோழியம் குறிப்புரையுடன் 1977
தொன்னூல் விளக்கம் குறிப்புரையுடன் 1978
குவலயானந்தம் சந்திரலோகம் 1979
பிரபந்த தீபம் 1980
தொல்காப்பியப் பதிப்புகள் 1992
மொழிக்கட்டுரைகள் 1974

சங்க இலக்கியம் 2006
மெய்யப்பன் தமிழகராதி 2006
தமிழ் இலக்கண நூல்கள் 2007
பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் 2007
பன்னிரு திருமுறைகள் 2007
Descriptive Grammar of Chilappathikaram 1975
Grammar of Akananuru 1972
Studies in Tamil Language and Literature 1973
Studies in Tamilology 1982
Tolkappiyam in English 2004
சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் (மலையாளம்) 1966

ச.வே.சுப்பிரமணியன் (1929 - 2017)
பிறப்பு திசம்பர் 31, 1929
வீரகேரளம்புதூர், திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு
இறப்பு 12 சனவரி 2017 (அகவை 87)
தேசியம் இந்தியர்
கல்வி முனைவர் (கேரளா பல்கலைக்கழகம்)
இளங்கலை(அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
பணி பேராசிரியர்
அறியப்படுவது எழுத்தாளர், தமிழறிஞர்
பெற்றோர் சு. சண்முகவேலாயுதம், இராமலக்குமி

(😊)(😊) @@@@@@@@@@@@@@ (😊)(😊)

ச.வே.சுப்ரமணியன்

https://tamil.wiki/wiki/%E0%AE%9A.%E0%AE%B5%E0%AF%87.%E0%AE%9A%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%B0%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%A9%E0%AF%8D

ச.வே.சுப்ரமணியன் (டிசம்பர் 31, 1929 - ஜனவரி 12, 2017) (ச.வே.சுப்பிரமணியன்) தமிழறிஞர், இலக்கண ஆய்வாளர். கல்வியாளர் திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், துறைத்தலைவராகவும் பணியாற்றியுள்ளார். சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

Contents

பிறப்பு, கல்வி

ச.வே.சுப்ரமணியன் திருநெல்வேலி மாவட்டம் வீரகேரளம்புதூரில் சு. சண்முகவேலாயுதம், இராமலக்குமி இணையருக்கு டிசம்பர் 31, 1929-ல் பிறந்தார். விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள புனித இருதய மேல்நிலைத் தொடக்கப் பள்ளியிலும், அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி பயின்றார். இடைநிலைக் கல்வியை திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரியில் பயின்று, 1950 -1953-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று இளங்கலை (சிறப்பு) பட்டம் பெற்றார். முனைவர் பட்டத்தைக் கேரளப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து பெற்றார்.



தனிவாழ்க்கை

1953-1956 காலப்பகுதியில் தூத்துக்குடி வ.உ.சி.கல்லூரியில் தமிழ் பயிற்றுநராகப் பணியைத் தொடங்கி, பின்னர் பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியிலும், திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கல்லூரியிலும் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர் கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத்தலைவராகப் பணியாற்றினார்.

இலக்கிய வாழ்க்கை

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகப் பணிபுரிந்த ச.வே.சுப்ரமணியன் கம்பராமாயணம், சிலப்பதிகாரம் பற்றிய ஆய்வு நூல்களையும் இலக்கண ஆய்வுகளையும் வெளியிட்டுள்ளார். தமிழ் நிகண்டுகள் என்னும் இவருடைய நூல் தமிழ்வளர்ச்சித்துறை விருது பெற்றது. வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கம் நூலை பதிப்பித்துள்ளார்.



நெல்லை மாவட்டம், பாபநாசத்தில் 1969-ல் திருவள்ளுவர் கல்லூரியை உருவாக்கி குன்றக்குடி ஆதீன நிர்வாகத்திற்கு அளித்தார். இவருடைய வழிகாட்டலில் 44 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். தமிழில் 165 நூல்களும் ஆங்கிலத்தில் 9 நூல்களும் மலையாளத்தில் ஒரு நூலும் எழுதியுள்ளார்.

நெல்லை அருகே பல ஏக்கர் நிலம் வாங்கி அங்கே தமிழூர் என்னும் சிறுநகரை உருவாக்கினார். அங்கே உலகத்தமிழ் கல்வி இயக்கம் என்னும் அமைப்பை நிறுவி 25000 நூல்கள் கொண்ட மூன்று நூலகங்களையும் உருவாக்கினார். தமிழ்மாணவர்கள் தங்கி ஆய்வுசெய்வதற்குரிய வசதிகளை ஏற்படுத்தினார். வேளாண்மையில் ஈடுபாடுகொண்ட ச.வே.சுப்ரமணியம் தன் நிலத்தில் வேளாண்மைப் பட்டையப்படிப்பு வகுப்புகளையும் சிலகாலம் நடத்தினார்.

மறைவு

ஒரு விபத்துக்குப் பின் சிலகாலம் நோயுற்றிருந்த ச.வே.சுப்ரமணியன் ஜனவரி 12, 2017-ல் மறைந்தார்.

விருதுகள்

- செந்தமிழ்ச் செம்மல் விருது
- இராமநாதபுரம் மன்னர் பாஸ்கரசேதுபதி விருது
- சாகித்திய அகாதெமி வழங்கிய பாஷா சம்மான் விருது
- தமிழாகரர் விருது
- சைவநன்மணி விருது
- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை விருது
- ஔவைத்தமிழ் அருளாளர் விருது
- தமிழியக்கச் செம்மல் விருது
- ராஜா அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளை விருது (ரூ. 1 இலட்சம் பரிசு)
- தொல்காப்பியச் செம்மல் விருது
- சென்னை கம்பன் விருது
- தமிழக அரசின் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ரூ. 1 இலட்சம் பரிசு
- கலைஞர் விருது ரூ. 1 இலட்சம் பரிசு
- தருமபுர ஆதீனம் செந்தமிழ்க் கலாநிதி விருது

இலக்கிய இடம்

ச.வே.சுப்ரமணியம் தீவிரமான தமிழ்ப்பற்றில் இருந்து உருவாகும் வழிபாட்டுணர்வுடன் ஆய்வுகளை மேற்கொண்டவர். ஆகவே பெரும்பாலும் நயம்பாராட்டல், விதந்தோதல் ஆகிய கோணங்களிலேயே அவருடைய ஆய்வுகள் உள்ளன. மனோன்மணியம் பெ.சுந்தரம் பிள்ளை, எஸ். வையாபுரிப் பிள்ளை, கே.என். சிவராஜ பிள்ளை போன்ற ஆய்வாளர்களின் புறவயமான பார்வையோ முறைமையோ அவரிடமில்லை. தமிழ் நூல்களின் காலங்களை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கொண்டு செல்கிறார்.

இலக்கணநூல்களின் பதிப்பு மற்றும் உரையே ச.வே.சுப்ரமணியனின் முதன்மைப் பங்களிப்பு. விரிவான மூலநூல், பாடவேறுபாடு ஒப்புநோக்குதலும் செம்மையாக்கமும் கொண்ட நூல்கள் அவை. ச.வே.சுப்ரமணியன் தமிழ் நூல்கள் மீதான ஆய்வுசார்ந்த ரசனைவாசிப்பு முறை ஒன்றை உருவாக்கியவர். கம்பராமாயணம், சிலப்பதிகாரம் ஆகியவற்றில் இருந்து வரலாறு, வாழ்க்கை சார்ந்த நுட்பங்களை கண்டடையும் வாசிப்பு அது. பேராசிரியராக இரண்டு தலைமுறை மாணவர்களை தமிழறிஞர்களாக உருவாக்கியவர்.

தமிழூர் கண்ட தமிழர் ச.வே.சுப்பிரமணியன்

https://muelangovan.wordpress.com/2013/02/07/%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%82%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%95%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F-%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%9A-%E0%AE%B5%E0%AF%87-%E0%AE%9A/

அறிஞர் ச.வே.சுப்பிரமணியன் அவர்கள்
(ஆராய்ச்சிக்கூடத்தின் அருகில்)



முனைவர் ச. வே. சுப்பிரமணியன் ஐயா அவர்கள் சென்னையில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பல உயராய்வுகள் நடைபெறவும் அரிய நூல்கள் வெளிவரவும் முன்னின்று உழைத்தவர் என்றவகையில் அவர்மேல் எனக்கு மிகப்பெரிய மதிப்பு என்றும் உண்டு.

இயக்குநராக அவர் பணியாற்றிய காலத்தில் மிகச்சிறந்த ஆய்வாளர்களை உருவாக்கித் தமிழ் ஆராய்ச்சி உலகம் சிறந்த பாதையில் செல்லத் துணைநின்றவர் என்பதை வரலாறு பதிவு செய்துள்ளது.

இவர் அறிஞர் வ.ஐ.சுப்பிரமணியன் அவர்களின் மாணவர் என்ற வகையிலும் என் பேராசிரியர் க.ப. அறவாணன் அவர்களின் ஆசிரியர் என்றவகையிலும் மேலும் மதிப்பு வைத்திருந்தேன். முனைவர் ச.வே.சு. அவர்களின் சிலப்பதிகாரம் உரை கற்று அவரின் சிலம்பு ஈடுபாட்டை அறிந்தேன். பேராசிரியரின் மூத்த மாணவர்கள் பலரும் ஐயாவுக்குச் சிலப்பதிகாரத்தில் மிகப் பெரிய புலமை உண்டு எனவும் வகுப்பறைகளில் சிலப்பதிகாரத்தை இசையுடன் பாடியே பாடம் நடத்துவார் என்றும் கூறக்கேட்டு வியப்படைந்தேன். சிலப்பதிகாரத்தை இவர் வழியாகக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் இந்த நொடி வரை உண்டு.

சிலப்பதிகாரத்திற்கு ஐயா அவர்கள் உரை வரைந்ததுடன் மட்டும் அமையாமல் கானல்வரிஇ அரகேற்றுகாதை உள்ளிட்ட சிலம்பின் பகுதிகளுக்கும் உரைகண்ட பெருமைக்குரியவர். என் மகள்களுக்குக் "கானல்வரி" "கண்ணகி" என்று பெயரிட்டுள்ளமையே அறிந்து ஒவ்வொரு சந்திப்பிலும் மழலைகளை நலம் வினவியும் வாழ்த்துரைத்தும் மகிழ்வார். ஒவ்வொரு சந்திப்பிலும் தாம் இந்த ஆண்டு வெளியிட உள்ள நூல்களைப் பட்டியலிடுவார். அவர் சொன்னபடியே அந்த அந்த நூல்கள் அந்த அந்த மாதங்களில் வெளிவரும். கடும் உழைப்பையும் தமிழ்ப் பற்றையும் இரு கண்களாகப் போற்றும் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள் எம்மைப்போலும் இளையாருக்கு ஒருவழிகாட்டி.

குற்றாலம் பயிலரங்கில் நிகழ்ச்சியை முடித்ததும் நண்பர் பட்டாபி அவர்களிடம் தமிழூர் செல்ல வேண்டும் எனவும் அறிஞர் ச.வே.சு அவர்களைக் காண வேண்டும் எனவும் குறிப்பிட்டேன் இரண்டு மணி நேரத்தில் சென்று திரும்புவதில் உள்ள இடர்ப்பாட்டால் முனைவர் பட்டாபி அவர்கள் சற்றுத் தயங்கினார்கள். போகவும் வரவும் ஒன்றரை மணி நேரம் ஆகும் எனவும் அரை மணி நேரத்தில் ஐயாவிடம் இருந்து விடை பெறுவது இயலாது எனவும் கருத்துரைத்தார். இலக்கை அடையும் வரை ஓய்வறியா எனக்கு முனைவர் பட்டாபியின் தயக்கம் தெரிந்தது. தொடர்வண்டியை விட்டால் பேருந்தில் செல்லலாம் என்று

குறிப்பிட்டுவிட்டு வண்டியைத் தமிழூருக்குச் செலுத்தும்படி கேட்டுக்கொண்டேன். தமிழூரை நோக்கி எங்கள் வண்டி வேகமாக முன்னேறியது.

நெல்லை – குற்றலாம் பெருவழிச்சாலையில் தமிழூர் அமைந்துள்ளது. சாலையை ஒட்டிச் ச.வே.சு அவர்களின் இல்லம் ஒரு "தமிழ் மாளிகை" போல் இருந்தது. வீட்டில் இருந்தவர்களிடம் எங்கள் வருகையைத் தெரிவித்தவுடன். அருகில் இருக்கும் அலுவலகத்தில் ஐயா அவர்கள் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டு இருப்பதாக உரைத்தார்கள். முன் மடல் அனுப்பாமல் ஐயாவைச் சந்திப்பதில் எங்களுக்குத் தயக்கம் இருந்தது. என்றாலும் "உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்" அலுவலகத்தை அடைந்தோம்.

எங்களைப் பார்த்தவுடன் ஐயா அவர்கள் தம் உதவியாளர் திரு. ஆறுமுகம் அவர்களை அனுப்பி எதிர்கொண்டு அழைத்தார். ஐயா அவர்களின் தமிழ்த் திருவடிகளை வணங்கினேன்.

பெரும்பான்மையான மக்கள் பணம் சம்பாதிக்கவும் மளிகைக் கடை நடத்தவும் சீட்டுப் பிடிக்கவும் கேளிக்கைகளில் ஈடுபடவும் அலுவலகம் அமைக்கும் இன்றைய உலகில் தமிழ் ஆராய்ச்சிக்காக ஒரு அலுவலகத்தைக் கட்டி முடித்து அதில் தமிழ் ஆராய்ச்சி வாழ்க்கை மேற்கொண்டு தொடர்ந்து நூலாக்கப் பணிகளில் ஈடுபடும் ச.வே.சு அவர்களை நினைத்துப் பெருமை கொண்டேன்.

ஐயாவிடம் சுருக்கமாக நலம் வினவினோம் அவர்கள் வீடு வரை உரையாடியபடி வந்தார்கள். தாம் தமிழூர் என்று பெயர் வைக்க 100 ஏக்கர் நிலம் வாங்கிய வரலாற்றை நினைவுகூர்ந்தார்கள். அந்தப் பெருநிலத்தில் பெரிய வீடுகள் கட்டிக் குடிக்கூலிக்கு மாணவர்களுக்கு வழங்கியுள்ளதைக் குறிப்பிட்டார்கள். தம் உதவியாளர் ஆறுமுகம் அவர்களின் சிறப்புகளின் வினைத்திட்பத்தையும் எடுத்துரைத்தார்கள்.

நினைவுக்குச் சில படங்களை எடுத்துக்கொண்டோம். இரவு 7 மணிக்குத் தொடர்வண்டி என்பதால் ஐயா அவர்கள் எங்களுக்கு அவரின் நூலகத்தைப் பருந்துப் பார்வையாகக் காட்டி மகிழ்ந்தார். முன்னமே எங்களுக்கு இளநீர் வரச்செய்து விருந்தோம்பினார். தம் கையெழுத்திட்டுச்

சில நூல்களை வழங்கினார். தொல்காப்பியம்இ தமிழ் மொழி குறித்துத் தாம் எழுதி வரும் ஆங்கில நூலின் அமைப்பை எடுத்துரைத்தார்.

சிலப்பதிகாரத்தில் மிகச் சிறந்த புலமை பெற்ற மார்க்கபந்து சர்மா என்ற அறிஞரைத் தெரியுமா என்றார். விழித்தேன் அவரின் சிறப்புகளையும் அவர் தம் சிலப்பதிகாரப் புலமையையும் எடுத்துரைத்தார். மார்க்கபந்து சர்மா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிவதில் என் உள்ளம் ஈடுபட்டது. ஐயாவிடம் இருந்து பிரியாவிடை பெற்றுத் தென்காசித் தொடர்வண்டி நிலையத்தை அடைந்தபொழுது பொதிகைத் தொடர் வண்டி எனக்காக ஒரு நிமையம் காத்திருந்தது.



தமிழூர் கண்ட ச.வே.சு.



ச.வே.சுப்பிரமணியன் அவர்களின் வாழ்வியலையும் நூல்களின் பட்டியலையும் இணைப்பில் இணைத்துள்ளேன். பயன்படுத்துவோர் எடுத்த இடத்தைக் குறிப்பிடுக.

அறிஞர் ச.வே.சு. அவர்களின் தமிழ் வாழ்க்கை

83 அகவையாகும் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் 31. 12. 1929இல் வீரகேரளம்புதூரில் பிறந்தார். தந்தை சண்முக வேலாயுதம் பிள்ளை. தாய் இராமலக்குமி அம்மாள்.

கல்வி

தொடக்கக் கல்வி விக்கிரமசிங்கபுரம் புனித இருதய மேல்நிலை தொடக்கப் பள்ளியிலும்,உயர்நிலைப் பள்ளிக் கல்வி தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியிலும் அமைந்தது (அம்பாசமுத்திரம்). ம. தி. தா. இந்துக் கல்லூரியில் இடைநிலைக்கல்வி. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி. ஏ. ஆனர்ஸ் 1950-53. முனைவர் பட்டம் கேரளப்பல்கலைக்கழகம் திருவனந்தபுரம்.

பணி

தூத்துக்குடி வ. உ. சி கல்லூரியில் 1953-56 தமிழ் பயிற்றுநர். சில மாதங்கள் சவேரியர் கல்லூரி பாளையங் கோட்டையில் பணி. திருவனந்தபுரம் பல்கலைக்கழக கல்லூரி பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர். தமிழ்த்துறைத் தலைவர், சென்னை உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர்.

நூல்கள்

இதுவரை எழுதப்பெற்ற நூல்கள்

தமிழில் 160 ஆங்கிலத்தில் 8, மலையாளத்தில்-1 தமிழகத்தில் எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் 20 அறக்கட்டளைச் சொற்பொழிவு ஆற்றி, அவற்றை நூல்களாக வெளியிட்டமை. வானொலிப் பேச்சுகளாக 100க்கு மேல், ஆய்வுக்கட்டுரைகள் 200க்கு மேல்.

உலக அரங்கில்

இந்தியாவிலும் உலக அரங்குகளிலும் பல கருத்தரங்குகளில் கலந்து கொள்ளுதல். தமிழின் வளர்ச்சிக்காகவும், கருத்தரங்குகளில் கலந்து கொள்வதற்காகவும், இலங்கை, மொரீசியஸ், மேற்கு,ஜெர்மனி, போலந்து, செக்கோஸ்லோவோகியா, ஜப்பான், ஹாங்காங், தாய்லாந்து, மணிலா,

சிங்கப்பூர், மலேசியா, பாரிஸ், இலண்டன், ஏதென்ஸ், கெய்ரோ போன்ற நாடுகளுக்கும் நகரங்களுக்கும் சென்று வருதல்.

இவர் வழிகாட்டலில் கேரளம், மதுரை காமராசர், சென்னை, பெங்களூர் ஆகிய பல்கலைக்கழங்களில் 44 பேர் முனைவர் பட்டம் பெறுதல்.

1985இல் தமிழகத்தில் தமிழூர் என்ற ஊரை உருவாக்கினமை. தமிழகம் வீட்டின் பெயர், தமிழ்நகர் இடத்தின் பெயர், தமிழூர் ஊரின் பெயர்.

நெல்லை மாவட்டம் பாபநாசத்தில் திருவள்ளுவர் கல்லூரியை 1969இல் தோற்றுவித்தல்.

பரிசுகளும் பாராட்டும்

84இல் கம்பன் இலக்கிய உத்திகள் என்ற நூலுக்குத் தமிழக அரசின் முதல் பரிசைப் பெறுதல்.

ன்றக்குடி ஆதீனத்தால் திருப்பத்தூர் தமிழ்ச்சங்கத்தின் வழி தமிழாகரர் பட்டம் பெறுதல்.

96இல் தமிழகப் புலவர்குழு செந்தமிழ்ச் செம்மல் என்ற விருதினைத் தருதல்.

. 11. 1997இல் இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதியின் விருது பெறல்.

99இல் இந்திய சாகித்ய அகாதெமி வழங்கிய பாஷாசம்மான் என்ற விருதினைப் பெறல் (சாகித்ய அகாதெமி வழி தமிழுக்கு பாஷாசம்மான் என்ற விருது ச. வே. சு வைத் தவிர வேறுயாருக்கும் இதுவரை வழங்கப்பெறவில்லை)

00இல் நல்அறிஞர் என்ற விருதினை இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் வழிப்பெறுதல்

01இல் கோவை சைவவேளாளர் சபையின் சார்பில் திருநாவுக்கரசர் விருதாகிய சைவநன்மணி என்ற விருதினைப் பெறுதல்.

01இல் திருவாவடுதுறை ஆதீனம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை நினைவுப்பரிசு பெறுதல்.

.05.2003இல் திருவையாறு ஔவைக்கோட்டத்தின் வழி ஔவைத் தமிழ் அருளாளர் விருதினைப் பெறுதல்.

27.06.2003இல் தமிழ் இயக்கச் செம்மல் என்ற விருதினைச் சிதம்பரம் மெய்யப்பன் தமிழாய்வகம் தருதல்.

05.08.2003இல் இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளைச் சார்பில் இராஜா சர். முத்தையாச் செட்டியார் பிறந்த நாள் நினைவுப் பரிசாகத் தமிழறிஞர் என்ற முறையில் ரூபாய் 1 இலட்சமும் விருதும் பெறுதல்.

28.05.2004 இல் தொல்காப்பியச் செம்மல் என்ற விருதினைப் பெறல்.

13.08.2004இல் கம்பன் விருது - கம்பன் கழகம் சென்னை மூலம் பெறுதல்.

17.09.2004இல் தமிழக அரசின் கி. ஆ. பெ. விசுவநாதம் பெயரில் அமைந்த ரூ. 1 இலட்சம் விருது பெறல்.

26.06.2006இல் இராசபாளையம் திருவள்ளுவர் மன்றம் பொதுமறை அறிஞர் விருது பெறல்.

2006இல் திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம் புலவர் மாமணி என்னும் சிறப்புப்பட்டம் தருதல்.

2008இல் அறவாணன் ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில் அனைத்துலக அறவாணன் சாதனை விருது பெறல்.

30.12.2009இல் கலைஞர் பொற்கிழி விருது - புத்தகக் கண்காட்சி (1 இலட்சம் ரூபாய்).

15.01.2010இல் தமிழ் நிகண்டுகள் - தமிழக அரசின் முதற்பரிசு பெறல்.

03.04.2010இல் இஸ்லாமியத் தமிழ் இலக்கியமன்றம் சார்பில் வாழ்நாள் சாதனையாளர் விருது பெறல்.

24.07.2010இல் கோவை இளங்கோவடிகள் இலக்கியமன்றம் சார்பில் உ. வே. சா விருது பெறல்.

30.07.2010 இல் சேக்கிழார் ஆராய்ச்சி மையம் சார்பில் சேக்கிழார் விருது பெறல்.

2010இல் தருமபுர ஆதீனம் மூலம் செந்தமிழ்க் கலாநிதி என்ற விருதினை பெறல்.

2011இல் திருக்கோவலூர்ப் பண்பாட்டுக் கழகம் சார்பில் கபிலர் விருது - கபிலவாணர் பட்டம் பெறல்.

நூல்கள்

1. இலக்கிய நினைவுகள் (1964,69, 74, 75,87)
2. சிலம்பின் சில பரல்கள் (1972)
3. இலக்கிய கனவுகள் (1972, 79)
4. மாந்தர் சிறப்பு (1974, 78, 81)
5. ஒன்று நன்று (1976)
6. அடியார்க்கு நல்லார் உரைத்திறன் (1976)
7. இலக்கிய உணர்வுகள் (1978)

8. கம்பன் கற்பனை (1978, 2004)
9. காப்பியப் புனைத்திறன் (1979)
10.கம்பனும் உலகியல் அறிவும் (1981, 2004)
11. கம்பன் இலக்கிய உத்திகள் (1982, 2002)
12. கம்பன் கவித்திறன் (2004)
13. இளங்கோவின் இலக்கிய உத்திகள் (1984)
14. இலக்கிய வகையும் வடிவும் (1984)
15. தமிழ் இலக்கிய வரலாறு (1999-2004) 416
16. சிலப்பதிகாரம் மூலம் (2001)
17. சிலப்பதிகார இசைப்பாடல்கள் (2001)

ஒப்பியல் இலக்கியம்

18. சிலம்பும் சிந்தாமணியும் (1977,79)
19. திராவிட மொழி இலக்கியங்கள் (1984, 2003)
20.இளங்கோவும் கம்பனும் (1986)
21. தொல்காப்பியம் திருக்குறள் சிலப்பதிகாரம்

நாட்டுப்புற இயல்

22.தமிழில் விடுகதைகள் (1975. 77, 80)
23. தமிழ் விடுகதைக் களஞ்சியம் (2003)

வாழ்வியல் நூல்கள்

24. காந்தி கண்ட மனிதன் (1969, 71)
25. பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள்
(1982, 2011)
26. நல்வாழ்க்கை (1992, 97)

தத்துவமும் உளவியலும்

27. மனிதம் (1995)
28. மனமும் உயிரும் (1996)
29. உடல் உள்ளம் உயிர் (2004)
30. மனம்
31. தாயுமானவர்

தாவர இயல்

32. தமிழர் வாழ்வில் தாவரம் (1993)

மண்வள ஆய்வு

33. கூவநூல் (1980)

கனவு நூல்

34. பொன்னவன் கனாநூல் (2004)

உரைகள்

35. சிலப்பதிகாரம் தெளிவுரை (1998, 2001)
36.சிலப்பதிகாரம் மங்கலவாழ்த்துப்பாடல்(1993)
37. தொல்காப்பியம் தெளிவுரை (1999-2010)
38. சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை (2001)
39. திருக்குறள் நயவுரை (2001)
40. திருமுருகாற்றுப்படை தெளிவுரை (2002)
41. கானல்வரி (2002)
42. சிலப்பதிகாரம் குன்றக்குரவை (2002)
43.பத்துப்பாட்டு மூலம் (2002)
44. பத்துப்பாட்டு உரை - கோவிலூர் ஆதீனம்

இலக்கணநூல்கள்

45. இலக்கணத் தொகை எழுத்து (1967)
46. இலக்கணத் தொகை சொல் (1970)
47. இலக்கணத்தொகை யாப்புபாட்டியல் (1978)
48. வீரசோழியம் குறிப்புரையுடன் (1977, 79)
49. தொன்னூல் விளக்கம் (1978)
50. குவலயானந்தம் சந்திராலோகம் (1979)
51. பிரபந்த தீபம் (1980)
52. தொல்காப்பியப் பதிப்புகள் (1992)
53. மொழிக்கட்டுரைகள் (1974, 78)
54. சங்க இலக்கியம் (2006)
55. மெய்யப்பன் தமிழ் அகராதி (2006)
56. தமிழ் இலக்கண நூல்கள் (2007)
57. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் (2007)
58. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும் (2008)
59. பன்னிரு திருமுறைகள் (2007)
60. தமிழ்ச் செவ்வியல் நூல்கள் (2008)
61. தமிழ் நிகண்டுகள் தொகுதி -1 (2008)
62. தமிழ் நிகண்டுகள் தொகுதி-2
63. மாணவர் செந்தமிழ் அகராதி (2008)
64. திருவள்ளுவர் பல்துறை அறிவு (2008)
65. திருவருட்பா முழுவதும் (2009)
66. தொல்காப்பியம் அறிமுகம் (2009)
67. தொல்காப்பியம் - நூன்மரபு (2009)
68. தொல்காப்பியம் -மொழிமரபு

69. தொல்காப்பியம் -பிறப்பியல்
70. தொல்காப்பியம் -புணரியல்
71. தொல்காப்பியம் -தொகைமரபு
72. தொல்காப்பியம் -உருபியல்
73. தொல்காப்பியம் -உயிர்மயங்கியல்
74. தொல்காப்பியம் -புள்ளி மயங்கியல்
75. தொல்காப்பியம் -குற்றியலுகரப்புணரியல்
76. தொல்காப்பியம் -கிளவியாக்கம்
77. தொல்காப்பியம் -வேற்றுமையியல்
78. தொல்காப்பியம் -வேற்றுமைமயங்கியல்
79. தொல்காப்பியம் -விளிமரபு
80. தொல்காப்பியம் -பெயரியல்
81. தொல்காப்பியம் -வினையியல்
82.தொல்காப்பியம் -இடையியல்
83. தொல்காப்பியம் -உரியியல்
84.தொல்காப்பியம் -எச்சவியல்
85.தொல்காப்பியம் -அகத்திணையியல்
86.தொல்காப்பியம் -புறத்திணையியல்
87.தொல்காப்பியம் -களவியல்
88.தொல்காப்பியம் -கற்பியல்
89.தொல்காப்பியம் -பொருளியல்
90.தொல்காப்பியம் -மெய்ப்பாட்டியல்
91.தொல்காப்பியம் -உவமவியல்
92.தொல்காப்பியம் -செய்யுளியல்
93. தொல்காப்பியம் -மரபியல்
94.தொல்காப்பியம் -இளம்பூரணர் உரை
95.தொல்காப்பியம் -நச்சினார்க்கினியர் உரை

சங்க இலக்கியம் - பத்துப்பாட்டு (2009)

96. திருமுருகாற்றுப்படை
97.பொருநர் ஆற்றுப்படை
98.சிறுபாண் ஆற்றுப்படை
99.பெரும்பாண் ஆற்றுப்படை
100.முல்லைப்பாட்டு
101.மதுரைக்காஞ்சி
102.நெடுநல்வாடை
103.குறிஞ்சிப்பாட்டு

104.பட்டினப்பாலை

105.மலைபடுகடாம்

சங்க இலக்கியம் – எட்டுத்தொகை (2009)

106. நற்றிணை

107. குறுந்தொகை

108. ஐங்குறுநூறு

109. பதிற்றுப்பத்து

110. பரிபாடல்

111. கலித்தொகை

112. அகநானூறு

113. புறநானூறு

சிலப்பதிகாரம்(2009)

114. மங்கலவாழ்த்துப்பாடல்

115. மனையறம் படுத்த காதை

116. அரங்கேற்றுகாதை

117. அந்திமாலைச் சிறப்புச்செய்காதை

118. இந்திரவிழவு ஊர் எடுத்தகாதை

119. கடலாடு காதை

120. கானல்வா

121. வேனில் காதை

122.கனாத்திறம் உரைத்த காதை

123. நாடுகாண் காதை

124. வேட்டுவ வரி

125. புறம்சேரி இறுத்த காதை

126. ஊர்காண் காதை

127.அடைக்கலக் காதை

128. கொலைக்களக் காதை

129.ஆய்ச்சியர் குரவை

130. துன்பமாலை

131.ஊர்சூழ்வரி

132.வழக்குரை காதை

133. வஞ்சின மாலை

134.அழல்படு காதை

135.கட்டுரைகாதை

136.குன்றக் குரவை

137.காட்சிக் காதை

138. கால்கோள் காதை
139.நீர்ப்படைக் காதை
140.நடுகல் காதை
141.வாழ்த்துக் காதை
142. வரம்தரு காதை
143. புகார்க்காண்டம்
144. மதுரைக்காண்டம்
145. வஞ்சிக்காண்டம்
146. தெளிவுரை முழுவதும்
147.திருக்குறள் நயவுரை
148.பதினெண் கீழக்கணக்குநூல்கள் உரையுடன்
149. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் „
150.சங்க இலக்கியம் மூலமும் முழுவதும்
151. தொகுதி 1 நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு
152. தொகுதி 2பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை
153. தொகுதி 3 அகநானூறு, புறநானூறு
154. தொகுதி 4பத்துப்பாட்டு
155. சங்க இலக்கியத்தில் குறிஞ்சிப்பாடல்கள்
156. „ முல்லைப்பாடல்கள்
157. „ மருதப் பாடல்கள்
158. „ நெய்தல் பாடல்கள்
159. „ பாலைப் பாடல்கள்
160. பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள்
161. ஐம்பெருங்காப்பியங்கள் மூலமும் உரையும்

ஆங்கில நூல்கள்

162. Descriptive Grammar of Cilapatikaaram
163.Grammar of Akananuuru
164.Studies of Tamil Language and Literature
165.Studies of Tamilology
166.Tolkaappiyam in English
167.Tolkaappiyam and Other Indian Grammatical treatises
168. An Introduction of Tolkaappiyam
169.Tolkaappiyar & Aristotle
170. Introduction of Tamil Literary Genres
171. தொல்காப்பியச் சுவடிகள், பதிப்புகள்,
பாடவேறுபாடுகளுடன் மூலமும் உரையும்
பாடவேறுபாட்டு வகைகள்-2012

மலையாள நூல்

172. **சிலப்பதிகார வஞ்சிகாண்டம் மொழிபெயர்ப்பு** - 1966

விருபா தமிழ்ப் புத்தகத் தகவல் திரட்டு

http://www.viruba.com/atotalbooks.aspx?id=493

தமிழ்ப் புத்தகங்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் ஒரே இடத்தில் திரட்டித் தரும் நோக்குடன் விருபா இணையதளம் 2005 முதல் செயற்பட்டுவருகிறது.



இணைக்கப்பெற்றுள்ள நூல்கள்: 15

ச. வே. சுப்பிரமணியன்

https://www.hindutamil.in/news/blogs/66048-10.html

பைந்தமிழ் மொழிக்கு பாங்குற தொண்டாற்றி வரும் முதுபெரும் தமிழறிஞர் ச. வே. சுப்பிரமணியன் பிறந்த தினம் இன்று (டிசம்பர் 31).

அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து

- l நெல்லை மாவட்டம் வீரகேரளம் புதூரில் பிறந்தவர் (1929). விக்ரம சிங்கபுரம் புனித இருதய மேல்நிலைப் பள்ளியில் ஆரம்பக் கல்வி பயின்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இளங்கலைப் பட்டமும் கேரளப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றார்.
- l தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியில் 1953 முதல் மூன்றாண்டுகள் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியிலும் திருவனந்தபுரம் பல்கலைக்கழகக்

கல்லூரியிலும் விரிவுரையாளராகப் பணியாற்றினார். கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராக வழிநடத்தினார்.

- | சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகப் பணியாற்றி அரிய ஆய்வு நூல்களை வெளியிட்டார். சிலப்பதி காரத்தில் விசேஷ ஈடுபாடு கொண்ட இவர், சிலப்பதிகாரத்தை இசையுடன் பாடியே பாடம் நடத்துவார்.

- | இவரது மாணவர்களில் பலர் இன்று புகழ்பெற்ற தமிழறிஞர்களாக உள்ளனர். படைப்பாற்றல் மிக்க இவர், தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மொழிகளில் எழுதும் திறன் பெற்றவர்.

- | இலக்கிய நினைவுகள், மாந்தர் சிறப்பு, ஒன்று நன்று, கம்பன் கற்பனை, இளங்கோவின் இலக்கிய உத்திகள், தமிழ் இலக்கிய வரலாறு, சிலப்பதிகாரம் மூலம், சிலம்பும் சிந்தாமணியும், பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள், தமிழ் நிகண்டுகள் உள்ளிட்ட ஏராளமான நூல்களை எழுதியுள்ளார்.

- | நாட்டுப்புறக் கலை, தத்துவம், தாவரவியல், மண் அமைப்பு ஆகியவை குறித்தும் எழுதியுள்ளார். சிலப்பதிகாரத்தின் சில பகுதிகள் உள்ளிட்ட தமிழின் தொன்மையான பல படைப்புகளை ஆங்கிலத்தில் பல தொகுதிகளாக மொழிபெயர்த்து வெளியிட்டார். சாகித்திய அகாடமி கமிட்டியின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். பேச்சாற்றல் மிக்கவர்.

- | 200-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார். வானொலியில் 100-க்கும் மேற்பட்ட உரைகளை நிகழ்த்தியுள்ளார். இலங்கை, மொரீசியஸ், ஜெர்மனி, போலந்து, செக்கோஸ்லவேகியா, ஜப்பான், பாரீஸ், லண்டன், கெய்ரோ உள்ளிட்ட பல நாடுகளுக்கும் பயணம் சென்று கருத்தரங்குகளில் கலந்து கொண்டுள்ளார்.

- | 1969-ல் நெல்லை மாவட்டம் பாபநாசத்தில் திருவள்ளுவர் கல்லூரியை தொடங்கினார். இவரது மேற்பார்வையில் 44 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். 1985-ல் நெல்லை மாவட்டத் தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் 'தமிழூர்' என்ற ஊரை உருவாக்கி அங்கு வாழ்ந்து வருகிறார். இவரது வீட்டின் பெயரே 'தமிழகம்'.

- l ராஜா சர் முத்தையா செட்டியார் நினைவுப் பரிசு உள்ளிட்ட பல பரிசுகளை வென்றுள்ளார். இந்திய சாகித்திய அகாடமியின் 'பாஷா சம்மான்' விருது பெற்ற முதல் தமிழறிஞர் என்ற பெருமைக்குரியவர், ராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி விருது, நல் அறிஞர் விருது, அவ்வைத் தமிழ் அருளாளர் விருது உள்ளிட்ட ஏராளமான விருதுகளையும் பெற்றுள்ளார்.

- l 'Tholkappiyam is the first Universal grammar in the Universe' என்ற தலைப்பில் ஒரு ஆய்வு நூலை 2015 ஜுன் மாதம் வெளியிட்டுள்ளார். 'தமிழ் ஞாயிறு', 'சாதனைச் செம்மல் ச.வே.சு.' ஆகிய தலைப்புகளில் இவருடைய வாழ்க்கை வரலாறு நூல்கள் வெளிவந்துள்ளன. தமிழ் சிற்றிலக்கியங்களை 50 தொகுப்புகளாக வெளியிடும் பணியில் தற்போது முனைந்துள்ள தமிழ்ப் பேரறிஞர் ச.வே.சுப்பிரமணியம், 86 வயதை இன்று நிறைவு செய்கிறார்.

தொல்காப்பியத்தெளிவுரை

ச.வே.சுப்ரமணியன்

ஆ.மணவழகன்

முனைவர்பட்ட ஆய்வாளர்

{கட்டுரை}

https://thamizhiyal.com/?p=2299

சாதனைச்செம்மல்

ச.வே.சு.



சாதனைச் செம்மல் ச.வே.சு. (ச.வே.சுப்பிரமணியன், 1929–2017) ஒரு சிறந்த தமிழ் அறிஞர், கல்வியாளர், மற்றும் ஆராய்ச்சியாளர். மா. கமலவேலன் எழுதிய "சாதனைச் செம்மல் ச.வே.சு" என்ற நூல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகப் பணியாற்றிய இவரது வாழ்க்கை வரலாறு, பதிப்புப்பணி, தமிழ் ஆளுமை மற்றும் சாதனைகளை விவரிக்கும் வாழ்க்கை வரலாற்று நூலாகும்.

முக்கிய அம்சங்கள்:

- **ஆளுமை:** ச.வே.சு. பதிப்புத்துறை, அகராதியியல், இலக்கண ஆய்வு ஆகியவற்றில் பெரும் பங்களிப்பை வழங்கியவர்.
- **நூல் விவரம்:** 'சாதனைச் செம்மல் ச.வே.சு.' நூலை மா. கமலவேலன் எழுதியுள்ளார், இது மணிவாசகர் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.
- **பங்களிப்பு:** தமிழியல் ஆய்வுகளிலும், நுணுக்கமான பதிப்புப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர்.

இந்த நூல், ச.வே.சு.வின் சீரிய வாழ்வையும், தமிழ் இலக்கியத்திற்கு அவர் ஆற்றிய பணிகளையும் ஆவணப்படுத்துகிறது.

சாதனைச் செம்மல் ச.வே.சு - கமலவேலன்;
பக்.176; ரூ.75; மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108;) 044-2536 1039.

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி வட்டம் வீரகேரள புதூரில் பிறந்தவர் ச.வே.சுப்பிரமணியன். தமிழ் வளர்ச்சிக்குப் பலதுறைகளில், பலமுனைகளில், பல வழிகளில் தொண்டு செய்தவர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின்

இயக்குநராய் அவர் ஆற்றிய பணிகள் ஏராளம். "ஆராய்ச்சிக்கு ச.வே.சு.' என்று திறனாய்வாளர்களால் அடையாளம் காணப்பட்டவர். ஆய்வடங்கலை முதன்முதலில் தோற்றுவித்தமை, இலக்கணத் தொகைகளை முதன்முதலில் உருவாக்கியமை, இலக்கியக் கொள்கைத் தொகுதிகளைப் படைத்தது, தமிழரின் மரபுச் செல்வம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றி ஆங்கிலத்தில் பல தொகுதிகளைக் கொண்டு வந்தது என ச.வே.சு.வின் சாதனைகள் ஏராளம். தமிழூர் என்ற ஊரை உருவாக்கிய பெருமைக்குரிய இவரின் நெறிகாட்டலில் முனைவர் பட்டம் பெற்றோர் நாற்பதுக்கும் மேற்பட்டோர் என்பது குறிப்பிடத்தக்கது. எண்பத்தொன்றில் எண்பத்தொன்று நூல்களைப் படைத்தளித்த தமிழறிஞர். ச.வே.சு.வின் சிறப்பைக் குன்றக் கூறாமலும், மிகைபடக் கூறாமலும் வாழ்க்கை வரலாற்று நூலுக்கு வளம் சேர்க்கும் வகையில் இந்நூலை உருவாக்கியுள்ளார் நூலாசிரியர்.

தமிழுக்காக உழைத்தவர்...
தமிழுக்காகவே வாழ்ந்தவர்...
தமிழ் அறிஞர் ச.வே.சு நினைவு பகிர்வு !

https://www.vikatan.com/government-and-politics/77663-tamil-scholar-savesubramanian-passes-away

தமிழ் மொழியின் மீதும் தமிழர்கள் மீதும் அளப்பறிய பற்றுக் கொண்டு செயல்பட்டவர்களில் மிக முக்கியமானவர், ச.வே.சுப்பிரமணியன். இலக்கியங்கள் மீது இவருக்கு இருந்த ஆளுமையின் காரணமாக 180 நூல்களை எழுதி உள்ளார். தமிழ் மட்டும் அல்லாமல் ஆங்கிலத்திலும் மலையாளத்திலும் இவர் புலமை வாய்ந்தவர். அதனால் ஆங்கிலத்தில் 8 நூல்களையும் மலையாளத்தில் ஒரு நூலும் எழுதி உள்ளார்.

அநேகமாக தமிழகத்தில் அவரது காலடித் தடம் பதியாத பல்கலைக் கழகங்களே இல்லை என்று சொல்லும் அளவுக்கு அனைத்து பல்கலைக் கழகங்களிலும் அறக்கட்டளைச் சொற்பொழிவை நிகழ்த்தி உள்ளார். இவரது

ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை இருநூற்றைத் தாண்டும்.. இவரிடம் ஆலோசனை பெற்று முனைவர் பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை 50-க்கும் அதிகம்.

தமிழ் மீது உள்ள பற்று காரணமாக அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், நெல்லை மாவட்டம் ஆலங்குளம் அருகே தமிழூர் என்ற கிராமத்தை அவரே உருவாக்கினார். அங்குள்ள தமிழ் நகரில் 'தமிழகம்" என்ற இல்லத்தில் வசித்து வந்தார். 87 வயதான நிலையிலும் தமிழுக்கு தொண்டு செய்து வந்த ச.வே.சுப்பிரமணியன், கடந்த 4-ம் தேதி சாலையில் நடந்து சென்றபோது வாகனம் மோதியதில் காயமடைந்தார். அதனைத் தொடர்ந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் இன்று காலை காலமானார்.

நெல்லை மாவட்டம் வீரகேரளம்புதூரில் 1929 டிசம்பர் 31-ம் தேதி, சு.சண்முக வேலாயுதம், ராமலட்சுமி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார் ச.வே.சுப்பிரமணியன். தொடக்கக் கல்வியை விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள திருஇருதய மேல்நிலைப் பள்ளியில் பயின்றார். உயர்நிலைப் பள்ளிக்கல்வியை அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியில் படித்தார். பின்னர், இடைநிலைக் கல்வியை ம.தி.தா இந்துக் கல்லூரியில் பயின்ற அவர், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டம் படித்தார். முனைவர் பட்டத்தை கேரள பல்கலைக்கழகத்தில் ஆய்வு மேற்கொண்டு முடித்தார்.

தூத்துக்குடி வ.உ.சி.கல்லூரியில் 1953-ல் பணியைத் தொடங்கிய அவர், பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி, திருவனந்தபுரம் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். கேரளப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத்தலைவராகவும் பணியாற்றிய அனுபவம் அவருக்கு இருந்தது. சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநராகவும் செயல்பட்டார். நெல்லை மாவட்டம் பாபநாசத்தில் 1969-ல் திருவள்ளுவர் கல்லூரி உருவாக்க காரணமாக இருந்தார்.

தமிழகத்தில் பல கருத்தரங்குகளில் இவர் ஆய்வுக் கட்டுரைகளை படித்துள்ளார். அத்துடன், இலங்கை, ஜெர்மனி, போலந்து, ஜப்பான், தாய்லாந்து, சிங்கப்பூர், இங்கிலாந்து உள்ளிட்ட பல வெளிநாடுகளுக்கும் சென்று ஆய்வுக் கட்டுரைகளையும் சிறப்பு சொற்பொழிவுகளையும் நிகழ்த்தி உள்ளார். இவர், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகப் பணிபுரிந்த காலத்தில், பல ஆய்வு நூல்களை வெளியிட்டார். இவரது நூல்கள் பல்வேறு பலகலைக் கழகங்களிலும் கல்லூரி மாணவர்களுக்கு பாடநூலாக உள்ளது.

பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், நெல்லை மாவட்டம் ஆலங்குளத்தில் தமிழூர் என்ற கிராமத்தை உருவாக்கினார். அங்கு இவரது வீட்டில் பல அரிய நூல்கள் இருந்ததால் எப்போதும் அங்கு மாணவர்கள் மற்றும் ஆய்வு மாணவர்களால் நிறைந்து இருக்கும். இவர், செந்தமிழ்ச் செம்மல், நல் அறிஞர், தமிழாசுரர், தமிழ் இயக்கச் செம்மல், தொல்காப்பியச் செம்மல் என பல பட்டங்களையும் விருதுகளையும் பெற்று உள்ளார். 1999-ல் சாகித்ய அகாடமி சார்பாக இவருக்கு ‘பாஷாசம்மன்” என்ற உயரிய விருது வழங்கப்பட்டது. தமிழ் மொழிக்காக பங்காற்றியதைக் கவவுரவிக்கிற வகையில் இந்த விருது சாகித்ய அகாடமியால் வழங்கப்பட்டது. அதன் பின்னர், இதுவரையிலும் தமிழ் மொழிக்காக வேறு எழுத்தாளர் யாருக்கும் இந்த விருது வழங்கப்படவில்லை.

இவர், இலக்கிய நினைவுகள், சிலம்பின் சில புரல்கள், இலக்கிய கனவுகள், மாந்தர் சிறப்பு, ஒன்று நன்று, இலக்கிய உணர்வுகள், கம்பன் கறபனை, கம்பன் கவித்திறன், இளங்கோவின் இலக்கிய உத்திகள், தமிழ் இலக்கிய வரலாறு, சிலப்பதிகார இசைப்பாடல்கள் என நூல்களின் வரிசை சென்று கொண்டே இருக்கிறது. ஆங்கிலத்தில், சிலப்பதிகாரத்தின் இலக்கணம், அகநானூறு இலக்கணம், தமிழ் இலக்கிய ஆய்வுகள் என 9 நூல்களை எழுதி இருக்கிறார். சிலப்பதிகாரத்தின் வஞ்சிக் காண்டத்தை மலையாள மொழியில் மொழிபெயர்த்து உள்ளார்.

இவரது வாழ்க்கை வரலாற்று நூல்களாக 'தமிழ் ஞாயிறு, சாதனைச் செம்மல்" மற்றும் தமிழ்ச் செம்மல் வ.வே.சு" என இரு படைப்புக்கள் வெளிவந்து உள்ளன. வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவே வாழ்ந்த ச.வே.சுப்பிரமணியன் மறைவுக்கு பல்வேறு தமிழ் அமைப்புகளும் தமிழ் ஆர்வலர்களும் இரங்கல் தெரிவித்து உள்ளனர். இவரது பெயரை அவரது படைப்புக்கள் காலம் கடந்தும் நினைவுகூரும் என்பது நிச்சயம்.

- ஆண்டனிராஜ்,

தாய்

தமிழ்ச் சமூகத்தின் முகம்

https://thaaii.com/2021/12/31/article-about-sa-ve-subramaniyan/

தமிழ் மொழியின் மீதும் தமிழர்கள் மீதும் அளப்பறிய பற்றுக் கொண்டு செயல்பட்டவர்களில் மிக முக்கியமானவர், ச.வே.சுப்பிரமணியன். இலக்கியங்கள் மீது இவருக்கு இருந்த ஆளுமையின் காரணமாக 180 நூல்களை எழுதி உள்ளார்.

தமிழ் மட்டும் அல்லாமல் ஆங்கிலத்திலும் மலையாளத்திலும் இவர் புலமை வாய்ந்தவர். அதனால் ஆங்கிலத்தில் 8 நூல்களையும் மலையாளத்தில் ஒரு நூலும் எழுதி உள்ளார்.

அநேகமாக தமிழகத்தில் அவரது காலடித் தடம் பதியாத பல்கலைக் கழகங்களே இல்லை என்று சொல்லும் அளவுக்கு அனைத்து பல்கலைக் கழகங்களிலும் அறக்கட்டளைச் சொற்பொழிவை நிகழ்த்தி உள்ளார்.

இவரது ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை இருநூற்றைத் தாண்டும். இவரிடம் ஆலோசனை பெற்று முனைவர் பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை 50-க்கும் அதிகம்.


தமிழ் மீது உள்ள பற்று காரணமாக அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், நெல்லை மாவட்டம் ஆலங்குளம் அருகே தமிழூர் என்ற கிராமத்தை அவரே உருவாக்கினார்.

அங்குள்ள தமிழ் நகரில் 'தமிழகம்" என்ற இல்லத்தில் வசித்து வந்தார். 87 வயதான நிலையிலும் தமிழுக்கு தொண்டு செய்து வந்த ச.வே.சுப்பிரமணியன், கடந்த 2017-ம் ஆண்டு சாலையில் நடந்து சென்றபோது வாகனம் மோதியதில் காயமடைந்தார்.

அதனைத் தொடர்ந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் சிசிக்சை பலனின்றி காலமானார்.

நெல்லை மாவட்டம் வீரகேரளம்புதூரில் 1929 டிசம்பர் 31-ம் தேதி, சு.சண்முக வேலாயுதம், ராமலட்சுமி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார் ச.வே.சுப்பிரமணியன். தொடக்கக் கல்வியை விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள திருஇருதய மேல்நிலைப் பள்ளியில் பயின்றார்.

உயர்நிலைப் பள்ளிக்கல்வியை அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியில் படித்தார். பின்னர், இடைநிலைக் கல்வியை ம.தி.தா இந்துக் கல்லூரியில் பயின்ற அவர், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டம் படித்தார். முனைவர் பட்டத்தை கேரள பல்கலைக்கழகத்தில் ஆய்வு மேற்கொண்டு முடித்தார்.



தூத்துக்குடி வ.உ.சி.கல்லூரியில் 1953-ல் பணியைத் தொடங்கிய அவர், பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி, திருவனந்தபுரம் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

கேரளப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத்தலைவராகவும் பணியாற்றிய அனுபவம் அவருக்கு இருந்தது.

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநராகவும் செயல்பட்டார்.

நெல்லை மாவட்டம் பாபநாசத்தில் 1969-ல் திருவள்ளுவர் கல்லூரி உருவாக்க காரணமாக இருந்தார்.

தமிழகத்தில் பல கருத்தரங்குகளில் இவர் ஆய்வுக் கட்டுரைகளை படித்துள்ளார். அத்துடன், இலங்கை, ஜெர்மனி, போலந்து, ஜப்பான், தாய்லாந்து, சிங்கப்பூர், இங்கிலாந்து உள்ளிட்ட பல வெளிநாடுகளுக்கும் சென்று ஆய்வுக் கட்டுரைகளையும் சிறப்பு சொற்பொழிவுகளையும் நிகழ்த்தி உள்ளார்.

இவர், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகப் பணிபுரிந்த காலத்தில், பல ஆய்வு நூல்களை வெளியிட்டார். இவரது நூல்கள் பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் கல்லூரி மாணவர்களுக்கு பாடநூலாக உள்ளது.

பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், நெல்லை மாவட்டம் ஆலங்குளத்தில் தமிழூர் என்ற கிராமத்தை உருவாக்கினார். அங்கு இவரது வீட்டில் பல அரிய நூல்கள் இருந்ததால் எப்போதும் அங்கு மாணவர்கள் மற்றும் ஆய்வு மாணவர்களால் நிறைந்து இருக்கும்.

இவர், செந்தமிழ்ச் செம்மல், நல் அறிஞர், தமிழாசுரர், தமிழ் இயக்கச் செம்மல், தொல்காப்பியச் செம்மல் என பல பட்டங்களையும் விருதுகளையும் பெற்று உள்ளார். 1999-ல் சாகித்ய அகாடமி சார்பாக இவருக்கு ‘பாஷாசம்மன்” என்ற உயரிய விருது வழங்கப்பட்டது.

தமிழ் மொழிக்காக பங்காற்றியதைக் கவவுரவிக்கிற வகையில் இந்த விருது சாகித்ய அகாடமியால் வழங்கப்பட்டது. அதன் பின்னர், இதுவரையிலும் தமிழ் மொழிக்காக வேறு எழுத்தாளர் யாருக்கும் இந்த விருது வழங்கப்படவில்லை.

இவர், இலக்கிய நினைவுகள், சிலம்பின் சில புரல்கள், இலக்கிய கனவுகள், மாந்தர் சிறப்பு, ஒன்று நன்று, இலக்கிய உணர்வுகள், கம்பன் கற்பனை, கம்பன் கவித்திறன், இளங்கோவின் இலக்கிய உத்திகள், தமிழ் இலக்கிய வரலாறு, சிலப்பதிகார இசைப்பாடல்கள் என நூல்களின் வரிசை சென்று கொண்டே இருக்கிறது.

